# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2315 - 2023 ජනවාරි මස 13 වැනි සිකුරාදා - 2023.01.13

*2315 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |

| | பக்கம் |
|---|---|
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 16 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 17 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2023, பெப்புருவரி மாதம் 03ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, சனவரி மாதம் 20ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

15- B 082418 - 353 (2023/01)

# காணி அபிவிருத்தி கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

இணைப்பு 09

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

தென் மாகாண சபையின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் லுணுகல்வெஹெர பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் ( மாகாணங்களுக்கிடையிலான) இசங்க லக்மால் விக்ரமநாயக்க ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் கௌரவ சனாதிபதி அவர்களால் 2000.02.24 ஆந் திகதி அளிக்கப்பட்ட ஹம்/ 11/ப்ர 54632 ஆம் இலக்கமுடைய அன்பளிப்புப் பத்திரத்தின் உரிமையாளராகிய இல. 163, குடாகம்மான 18, தெற்குக் கரை லுணுகம்வெஹெர எனும் இடத்தில் வசிக்கின்ற நாம்பதுன்ன கம்மாச்சாரிகே நிலூகா நிசாந்தி அவர்களுக்கு அளிக்கப்பட்டு ஹம்/ 11/ ப்ர 54632 ஆம் இலக்க காணி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தின் இலக்கம் அம்/ 319/ 1229 / 2004 இன் கீழ் 2004.08.17 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டிருப்பதோடு கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் காணிக்கு உரிமைத் தத்துவகாரார் நியமிக்கப்பட்டமை தொடர்பில் சட்ட ரீதியான உரிமைத் தத்துவக்காரர் இல்லாமை அல்லது சட்ட ரீதியான உரிமைத் தத்துவக்காரர் இருந்தும் அவர் உரித்தாளராவதற்கு விருப்பமின்மை பற்றித் தெரிவித்தமை அறியக்கிடைத்துள்ளமையால் இக்குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்படி சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பான ஏதாவது ஆட்சேபனைகள் இருக்குமிடத்து எழுத்து மூமாக எனக்கு அறியத்தரவும்.

### அட்டவணை

அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டத்தில் லுணுகம்வெஹர பிரதேச செயலாளர் பிரிவின் மாகம் பத்துவில்/ கோரளையில், கரம்பவெவ கிராம அலுவலர் பிரிவின், தெற்குக் கரை, குடாகம்மான 18 என்னும் ஊரில் லுணுகம்வெஹெர பிரதேச செயலாளரின் பொறுப்பின் கீழ் உள்ள, மற்றும் நில அளவை ஆணையாளர் நாயகம் மூலம் வழங்கப்பட்ட ---- ஆம் இலக்க துண்டு, வெளிக்களப்பத்திரத்தின் ------ என்பவரால் தயாரிக்கப்பட்டு ---- ஆம் இலக்கம் துண்டு பிரிக்கும் வரைபடத்தில் ------ என்பவரால் தயாரிக்கப்பட்டு இரேகை ---- ஆம் இலக்கத்தின் 163 (வீடு) காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும்------- ஹெக்டயார்/ஏக்கர்----றூட்---- பேர்ச்------ விஸ்தீரணமுள்ள கீழுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு.

வடக்கு : உள்ளக வீதி;
கிழக்கு : இலக்கம் 162 உடைய வீட்டுக் காணி;
தெற்கு : அரச காணி;
மேற்கு : இலக்கம் 164 உடைய வீட்டுக் காணி.

ஐ.எல்.விக்கிரமநாயக்க,
பிரதேச செயலாளர் /பிரதிக்
காணி ஆணையாளர்,
(மாகணங்களுக்கிடைப்பட்ட).

பிரதேச செயலகம்,
லுணுகம்வெஹெர,
2022.11.16.

01- 140/1

---

இணைப்பு 09

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

தென் மாகாண சபையின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் லுணுகல்வெஹெர பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் ( மாகாணங்களுக்கிடையிலான) இசங்க லக்மால் விக்ரமநாயக்க ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் கௌரவ சனாதிபதி அவர்களால் 2000.08.22 ஆந் திகதி அளிக்கப்பட்ட

ஹம்/ 11/ ப்ர 55247 ஆம் இலக்கமுடைய அன்பளிப்புப் பத்திரத்தின் உரிமையாளராகிய இல. 938, குடாகம்மான 09, தெற்குக் கரை லுணுகம்வெஹெர எனும் இடத்தில் வசிக்கின்ற சித்ரானந்த ரணதுங்க அவர்களுக்கு அளிக்கப்பட்டு இலக்கம் ஹம்/ 11/ ப்ர 55247 கொண்ட காணி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் ---------இன் கீழ் --------- ஆந் திகதி பதிவு செய்யப்பட்டிருப்பதோடு கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் காணிக்கு பிறிதொருவர் நியமிக்கப்பட்டமை தொடர்பில் சட்ட ரீதியான உரிமைத் தத்துவக்காரர் இல்லாமை அல்லது சட்ட ரீதியான உரிமைத் தத்துவக்காரர் இருந்தும் குறித்த நபர் உரித்தாளராவதற்கு விருப்பமின்மை பற்றித் தெரியப்படுத்தியமை அறியக்கிடைத்துள்ளமையாலும் இக்குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்படி சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பான ஏதாவது ஆட்சேபனைகள் இருக்குமிடத்து 2023.02.03 ஆந் திகதிக்கு முன்னதாக எனக்கு எழுத்து மூலமாக அறியத்தரவும்.

**அட்டவணை**

அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டத்தில் லுணுகம்வெஹர பிரதேச செயலாளர் பிரிவின் மாகம பத்துவே கோரளையின், சமன்புர கிராம அலுவலர் பிரிவின், தெற்குக் கரை, குடாகம்மான 09 என்னும் ஊரில் லுணுகம்வெஹெர பிரதேச செயலாளரின் பொறுப்பின் கீழ் உள்ள, மற்றும் நில அளவை ஆணையாளர் நாயகம் மூலம் வழங்கப்பட்ட ---- ஆம் இலக்க துண்டு, வெளிக்களப்பத்திரத் துண்டின் ------ என்பவரால் தயாரிக்கப்பட்டு ---- ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் ----- என்பவரால் தயாரிக்கப்பட்ட-------- ஆம் இலக்க காணி பிரிவிடல் துண்டில் ------ என்பவரால் தயாரிக்கப்பட்ட இரேகை ---- ஆம் இலக்கப் பத்திரத்தின் இல. 938 (வீடு)கொண்ட காணியின் ஹெக்டயார் /----- ஏக்கர்-------றூட்------- பேர்ச்-------- விஸ்தீரணமுள்ள கீழுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு.

வடக்கு : இலக்கம் 939 உடைய வீட்டுக் காணி;
கிழக்கு : இலக்கம் 937 உடைய வீட்டுக் காணி;
தெற்கு : உள்ளகப் பாதை;
மேற்கு : உள்ளகப் பாதை.

ஐ.எல்.விக்கிரமநாயக்க,
பிரதேச செயலாளர் /பிரதிக்
காணி ஆணையாளர்,
(மாகணங்களுக்கிடைப்பட்ட).

பிரதேச செயலகம்,
லுணுகம்வெஹெர,
2022.11.16.

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/69502.
மாகாணக் காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : EP/28/ LB/ LS/TRI/MOR/ 12.

## அரச காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

திருகோணமலை மாவட்டம், மொரவெவ பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான நொச்சிக்குளம் 230C கிராம அலுவலர் பிரிவின் மைலகுடாவெவ கிராமத்தின் அண்ணளவான நில வரைபடத்தின் 60 பேர்ச் அளவுடைய அரசகாணியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு திருமதி விலேகொட கமகே டேசி இந்திராணி என்பவர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறியத்தரப்படுகின்றது.

02. கோரரப்படும் காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

காணித்துண்டு இலக்கம் 2756 இன் எல்லை

வடக்கு : அரச காணி;
கிழக்கு : அரச காணி;
தெற்கு : ஏ 12 பாதை
மேற்கு : கெம் ரச ஹோட்டலுக்குச் சொந்தமான காணி.

03. இக்காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கக்கூடியதாய் இருக்கின்றது. இதன்பொருட்டு அரசினால் அனுமதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு முடிவுசெய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது வருடங்கள் (30) (2022.10.07 ஆந் திகதியிலிருந்து).

**வருடாந்தக் குத்தகைப் பணம்.**- 2022 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். வரி அமுல்படுத்தும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்கும் பட்சத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதி 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்து ஐந்து வருட காலப்பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

தவணைக் கட்டணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரின் மூலம் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து 01 வருட காலப்பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர் / பிரதிக் காணி ஆணையாளர் / பிரதேச செயலாளரின் மனம் திருப்பதிப்படுமாறு காணியானது அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரின் மூலம் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக் கூடாது;

(ஈ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தகைளுக்கும் இக் குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) காணியானது குத்தகைக்கு விடப்பட்ட காலப்பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2022.10.07 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது கையளிப்புச் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(எ) குத்தகைப் பணத்தைத் தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் இடைநிறுத்தப்படும் பட்சத்தில் குத்தகை சுயமாகவே செல்லுபடியற்றதாகும்.

04. இவ் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதித்தலாகாது எனக் கருதும் பட்சத்தில் அவற்றுக்கான தகுந்த காரணங்களை எழுத்து மூலம் எனக்கு அறிவிக்காதவிடத்து காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்படும்.

கே.எல்.பீ. சுபாஷினி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, திசெம்பர் 27.

01- 138

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/70740.
மாகாணக் காணி ஆணையாளர் நாயகத்தின்இல. : EP/28/ LB/ L10/TRI/Kuc/ 112.

## அரச காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

திருகோணமலை மாவட்டம், குச்சவெளி பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான கும்புருப்பிட்டி கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் கும்புருபிட்டி கிழக்கு கிராமத்தின் இலக்கம் PLC/ EP/ 28/ SUR/ 2018/ 002 நில வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 12 இன் 0.84093 ஹெக்டயார் அளவுடைய அளவுடைய அரசகாணியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு மரக்களகே சந்தன உதய குமார என்பவர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறியத்தரப்படுகின்றது.

02. கோரரப்படும் காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

காணித்துண்டு இலக்கம் 12 இன் எல்லை

வடக்கு : PLC/ EP/ 28/ SUR/ 2018/ 002 நில வரைபடத்தின் துண்டு இலக்கம் 01 மற்றும் 14;
கிழக்கு : PLC/ EP/ 28/ SUR/ 2018/ 002 நில வரைபடத்தின் துண்டு இலக்கம் 14 மற்றும் 16;
தெற்கு : PLC/ EP/ 28/ SUR/ 2018/ 002 நில வரைபடத்தின் துண்டு இலக்கம் 16 மற்றும் 13;
மேற்கு : PLC/ EP/ 28/ SUR/ 2018/ 002 நில வரைபடத்தின் துண்டு இலக்கம் 13 மற்றும் 01.

03. இக்காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கக்கூடியதாய் இருக்கின்றது. இதன்பொருட்டு அரசினால் அனுமதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு காணியினைக்

குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு முடிவுசெய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.-** முப்பது வருடங்கள் (30) (2022.10.07 ஆந் திகதியிலிருந்து.

**வருடாந்தக் குத்தகைப் பணம்.-** 2022 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். வரி அமுல்படுத்தும் வருடத்தின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்கும் பட்சத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதி 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்து ஐந்து வருட காலப்பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

*தவணைக் கட்டணம்:* அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரின் மூலம் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து 01 வருட காலப்பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளர் /பிரதேச செயலாளரின் மனம் திருப்பதிப்படுமாறு காணியானது அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரின் மூலம் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக் கூடாது;

(ஈ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தகைளுக்கும் இக் குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) காணியானது குத்தகைக்கு விடப்பட்ட காலப்பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2022.10.07 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது கையளிப்புச் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(எ) குத்தகைப் பணத்தைத் தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் இடைநிறுத்தப்படும் பட்சத்தில் குத்தகை சுயமாகவே செல்லுபடியற்றதாகும்.

04. இவ் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதித்தலாகாது எனக் கருதும் பட்சத்தில் அவற்றுக்கான தகுந்த காரணங்களை எழுத்து மூலம் எனக்கு அறிவிக்காதவிடத்து காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்படும்.

கே.எல்.பீ. சுபாஷினி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, திசெம்பர் 29.

01- 139